[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். உப்பிலியாபுரம் மிக மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதி. அது மலைவாழ் மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி என்ற அடிப்படையில் அந்தப் பள்ளியில் இந்த ஆண்டு தேர்வு மையம் அமைத்துத் தருவதற்கு நானும் மிகுந்த முயற்சிகள் செய்தேன். ஆனால், வகுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த norms-லே அந்தப் பள்ளி வரவில்லை. இருந்தாலும், உப்பிலியாபுரம் பகுதியினுடைய புவியியல் சூழ்நிலைகளை, அதாவது இருக்கக்கூடிய environment-ஐக் கருத்திலே கொண்டு, சிறப்பு அனுமதி வழங்கலாமா என்று செயலாளரிடத்திலே விவாதித்து, அதற்குரிய முயற்சிகளை நான் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

60—

பாலம்

***126—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நடுமலைப் பாலத்தை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள நடுமலைப் பாலத்தை அகலப்படுத்தி, சுமார் ஏழரை மீட்டர் அகலம் கொண்ட பாலமாகக் கட்டுவதற்குச் சுமார் ரூ.40 இலட்சம் மதிப்பிலான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்குரிய அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. திட்டம் விரைவில் தொடங்கி, அந்தப் பணிகள் முடிக்கப்படும்.

2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் உள்ள நடுமலைப் பாலம் மிகக் குறுகிய பாலம். மிகக் குறுகிய இந்தப் பாலத்தின் வழியாக, எதிரிலே பேருந்துகள் வருகின்றபோது, வாகனங்கள் எல்லாம் பின்னோக்கிச் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. அது நாள்தோறும் மாணவ மாணவிகளும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் ஆயிரக்கணக்கானபேர்கள் சென்று வருகின்ற சாலையாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட அந்தக் குறுகிய பாலத்தை, விரிவுபடுத்தித் தரவேண்டும், அகலப்படுத்தித் தரவேண்டும் என்ற நீண்டநாளைய கோரிக்கைகள் சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, இப்போதுதான் கேட்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், கலைஞர் ஐயா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நினைத்து நான் பாராட்டுகிறேன். அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

இதேபோல, விவசாயிகள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்திருக்கின்றவாறு, வேட்டைக்காரன்புதூர் பாலத்தைக் கட்டவும், பூலாங்கிணறு சாலை அமைக்கவும், வால்பாறை சோலையாறு அணை சாலை அமைக்கவும், பொள்ளாச்சி முதல் வால்பாறை, வால்பாறை முதல் குரங்குமுடி வரை தடுப்புச் சுவர் ஏற்படுத்தவும் அரசு முன்வருமா என்பதையும், பொள்ளாச்சி முதல் வால்பாறை வரை பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிட்டு சீர்படுத்தித்தர அரசு முன்வருமா என்பதையும் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு பாலத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தச் சாலையானது ஊராட்சி ஒன்றியச் சாலை. எனவே, அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய வளைவுகளிலெல்லாம்

தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்குரிய மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. மிக அதிக அளவில் விபத்துகள் ஏற்படக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு, அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு 3 ஆண்டுக்காலமாக எடுத்திருக்கிறது. மேலும், விபத்துகள் அதிகமாக நடக்கக்கூடிய இடங்களிலும், அதேநேரத்தில் பாதுகாப்பு தேவையான இடங்களிலும் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

சாலைகளைப் பொறுத்தளவில், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே மட்டும் இந்த 3 ஆண்டுக் காலத்திலே ஏறத்தாழ 28 கோடியே 45 இலட்சம் ரூபாய்க்குப் பணிகள் நடந்திருக்கின்றன. இதில், 280 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன, மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை அவர் கவனத்திற்கு எடுத்துச்சொல்வதுடன், உடனடியாக அதிகாரிகள், அங்கேயிருக்கக்கூடிய பொறியாளர்கள், உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்துப் பராமரித்து வருகிறார்கள். தொடர்ந்து அதுபோல குறைபாடுகள் ஏற்படுமானால் உடனுக்குடன் அந்தச் சாலைகள் பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் மேல்நீராரணை, கீழ்நீராரணை என்ற பகுதிதான் இந்தியாவில் இரண்டாவது அதிக மழை பெய்கின்ற இடமாக இருக்கிறது. மிக அதிக மழை பெய்கின்ற காரணத்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடியிருக்கின்ற வெள்ளக்கோவிலுக்கே வால்பாறையிலிருந்துதான் விவசாயத்திற்கு மழைத் தண்ணீர் வருகிறது. வால்பாறையில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் வால்பாறையினுடைய சாலைகள் அரிப்பின் காரணமாக மிகவும் பழுதடைந்து விடுகின்றன. இதன் காரணமாக, வால்பாறைக்குச் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லுகின்றபோது மிகவும் வருத்தமடைகிறார்கள். மேலும், வால்பாறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஆழியாறு முதல் வால்பாறை வரை குறுகிய சாலைகள் இருப்பதாலும், தடுப்புச் சுவர் இல்லாமல் இருப்பதாலும், தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு வந்தன. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல்வேறு இடங்களிலே தடுப்புச் சுவர்களை ஏற்படுத்தி, விபத்துகளைக் குறைத்திருக்கின்றார்கள். வால்பாறை தொகுதியில்

2009 பிப்ரவரி 24]

இருக்கின்ற ஆழியாறு முதல் வால்பாறை வரை இருக்கின்ற சாலைகள் குறுகிய சாலைகள். சாலைகளுக்கு இரண்டு பக்கமும் மணல் பகுதியாக இருக்கிறது. பெரும் மழையால் சாலைகள் அரிக்கப்பட்டிருப்பதால் விபத்துகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, ஆழியாறு முதல் வால்பாறை வரை கான்கிரீட் சாலைகளை அமைத்தால் நிச்சயமாக விபத்தும் குறையும்; அரசுக்குச் செலவும் குறையும். மழையால் சாலைகளில் அரிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் சென்ற கூட்டத் தொடரிலே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, டாப் ஸ்லிப் சாலையையும், மேல்நீராரணை, கீழ் நீராரணை போன்ற சாலைகளையும் செப்பனிட்டுத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை செல்லக்கூடிய சாலை ஒரு மாநில நெடுஞ்சாலை. அந்தச் சாலை போக்குவரத்தினுடைய செறிவுக்கு ஏற்ப ஏறத்தாழ நம்முடைய மலைப் பாதை வரை இருவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய சாலைகளுக்கு வனத் துறையினுடைய அனுமதி பெறவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்திலே, அந்தச் சாலையை விரிவுபடுத்துகிற பணிகள் தாமதப்படுகின்றன. எனவே, முடிந்த அளவு இடைவழித் தடமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், நம்முடைய டாப் ஸ்லிப் சாலை, சோலையாறு, நீராறு சாலை போன்ற சாலைகளெல்லாம் போக்குவரத்துச் செறிவுக்கு ஏற்ப அகலப்படுத்தப்படவுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிமென்ட் சாலை, கான்கிரீட் சாலை அமைத்தால் ஏதுவாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கேற்ப கொண்டை ஊசி வளைவு (Hair pin bends) போன்ற பகுதிகளிலெல்லாம் கான்கிரீட் சாலைகள்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், சிமென்ட் சாலைகள் அமைப்பதற்கான மதிப்பீடுகள் கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால், அதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர்

[2009 பிப்ரவரி 24

அவர்கள், சாலைகள், பாலங்கள், கட்டமைப்பு போன்றவற்றிற்கு அதிக அளவிற்கு கடந்த மூன்றாண்டு காலமாக முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். அதேபோன்று தொடர்ந்து இந்த நான்காவது நிதியாண்டிலும் கூடுதலாக நிதியைத் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 6 மற்றும் 7@
பட்டியல் 6

1—

கரித்துகள் வெளியேறுதல்

வினா எண் 48659—திரு. செ. புஷ்பராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கண்டமங்கலம் தொகுதி, முண்டியம்பாக்கம், ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையின் புகையிலிருந்து கரித்துகள்கள் வெளியேறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையின் கொதிகலனிலிருந்து கரித்துகள்கள் வெளியேறுவதைத் தடுக்க, 90 மீ. உயரம் (ம) 2.7 மீ. விட்டம் கொண்ட புகைப்போக்கியுடன் மின்சாரம்மூலம் கரித்துகள்களைப் பிரிக்கும் சாதனம் (Electro Static Precipitator/ESP) 2 கோடி ரூபாய் மதிப்பில் தேசிய மிகுமின் நிறுவனத்திலிருந்து (BHEL) வாங்கி நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆண்டிற்கு இருமுறை பரிசோதனை செய்து புகைப்போக்கிமூலம் வெளியேறும் புகையிலுள்ள கரித்துகள்களின் அளவை சரிபார்க்கிறது. நவீன கருவிகள்மூலம் இருபத்து நான்கு மணி நேரமும் கண்காணித்து வரப்படுகிறது. அவ்வாறு

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.